ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிற்றிலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**முனைவர் இரா.மாதவி**
**இசைத்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

ஆய்வுச் சுருக்கம்

அள்ளக் குறையாத ஆழ்ந்த கருத்துக்களை உடைய பாடல்களின் களஞ்சியமாகத் திகழ்வது சிற்றிலக்கியங்கள் ஆகும். பிரபந்தங்கள் என்று சொல்லக் கூடிய சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைகளாகத் தமிழில் உள்ளன என உ.வே.சா குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவை தொண்ணூற்றாறுக்கு மேலாக நம் வழக்கில் உள்ளன. சங்க காலத்திலேயே சிற்றிலக்கியம் தோன்றிவிட்டது எனலாம். பின்னர் பல்வேறு காலங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் இன்று வரையிலும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இருப்பினும் கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நிற்கின்றன. இக்காலக்கட்டமே சிற்றிலக்கியக் காலம் என்று குறிப்பிடுகின்றது. அவ்வகையில் இக்கட்டுரையில் சிற்றிலக்கியங்களில் தோற்றம், அதன் வளர்ச்சியினைப் பற்றிய விவரங்கள் மற்றும் இவைகளின் தனித்தன்மை போன்றன தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களைப் பொதுவாகப் பேரிலக்கியம் சிற்றிலக்கியம் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், பெருங்கதை, வளையாபதி, குண்டலகேசி என்பன போன்ற பெருங்காப்பியங்களும் உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூடாமணி, நீலகேசி போன்ற சிறு காப்பியங்களும் பேரிலக்கியம் என்னும் வகைமையைச் சார்ந்தவையாம்.

இவ்வகையான இலக்கியங்கள் அதிகம் பாடல்களையும், தலைவனின் முழு வாழ்க்கை வரலாற்றையும், பல துறைகளையும் பெற்று அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நான்கினையும் கொண்டு அமைந்திருக்கும்.

சிற்றிலக்கியங்கள் அறம், பொருள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சார்ந்து குறைவான பாடல்களையும், தலைவனின் வாழ்க்கையின் ஒரு பகுதியையும் கொண்டிருக்கும். இவ்வகையில் தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பல்வகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையைச் சார்ந்தவை.

சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூற்றாறு என்று கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூல் கூறுகின்றது. இந்நூல்

**“ பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**

**தொண்ணூற்றாறு என்னும் தொகையது ஆம்” என்கிறது**

பொதுவாகச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என அறியப்பட்டாலும் இக்காலத்தில் தொண்ணூற்றாறுக்கும் மேலான சிற்றிலக்கியங்கள் அறியப்பட்டுள்ளன என அறிஞர்கள் கூறுகின்றன.

**சிற்றிலக்கியங்கள் தோன்றிய காலம்:-**

சங்க காலத்திலேயே சிற்றிலக்கியம் தோன்றிவிட்டது எனலாம். சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் 5 நூல்கள் ஆற்றுப்படை என்ற சிற்றிலக்கிய வகை ஆகும். சங்கம் மருவிய காலத்துத் தொகையான பதினெண் கீழ்க் கணக்கில் உள்ள இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவை சிற்றிலக்கியங்களே ஆகும்.

பக்தி இலக்கியக் காலத்தில் நாயன்மார்கள் இயற்றிய திருமுறைகள் பன்னிரு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றுள் பல்வேறு சிற்றிலக்கியங்கள் காணப்படுகின்றன. காரைக்கால் அம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம், மாணிக்க வாசகர் பாடிய திருத்தசாங்கம், திருக்கோவையார், திருமங்கை ஆழ்வார் பாடிய

திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் போன்றவை சிற்றிலக்கியங்கள் ஆகும்.

பின்னர் பல்வேறு காலங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் இன்று வரையிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும் கி.பி.15ஆம் நூற்றாண்டு முதல் 19ஆம் நூற்றாண்டு வரை சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன. இக்காலகட்டமே சிற்றிலக்கியம் காலம் என்று குறிக்கப்படுகிறது.

**சிற்றிலக்கிய வகைகள்:-**

சிற்றிலக்கியங்கள் பின்வருமாறு வகைகப்படுத்தப்படுகின்றன.

1.பொருள் அடிப்படை

2.எண்ணிக்கை அடிப்படை

3.புகழ்தல் அடிப்படை

4. யாப்பு அடிப்படை

5.சொல் முடிபு அடிப்படை

6.நாட்டுப்புற இயல் அடிப்படை

7.இசை அடிப்படை என ஏழு வகை ஆகும்.

**சிற்றிலக்கியம் தோற்றம்**

எந்த ஒரு இலக்கியமும் முதலில் தனிப் பாடலாக இருந்து பின் வளர்ச்சி பெற்றுத் தனி இலக்கியமாக உருவாகின்றன.

**“ஓதல் பகையே தூது இவைபிரிவே (தொல் .அகத்.நூற் 27)**

எனத் தொல்காப்பியம் கூறுகிறது. இதற்கு இளம்பூரணர் தம் உரையில் “கல்வி கற்கச் செல்லுதல் போரிடுவதற்காகச் செல்லுதல்

தூது செல்லுதல் ஆகிய மூன்று காரணங்களுக்காகத் தலைவன் தலைவி ஆகிய இருவரிடையே பிரிவு நிகழும் என்கிறார். இங்கு தூது செல்லுதல் பிற்காலத்தில் தூது என்ற இலக்கிய வகை தோன்றுவதற்கு உரிய இலக்கிய மூலம் எனலாம்.

சங்க காலத்தில் மன்னர்களைப் புகழ்ந்து பாடும் நிலை எழுந்த போது பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வகை தோன்றியது. இதுவே இறைவனை துயில் எழுப்பப் பாடும் திருப்பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வகை தோன்றக் காரணம் எனலாம்.

சிற்றிலக்கியம் தோன்றிய காலம் முதல் தற்போதைய காலம் வரை வழக்கில் பல சிற்றிலக்கியங்கள் உருவாக வழி வகுத்தன.

இதை போன்று முந்தைய இலக்கியங்களில் உள்ள உறுப்புகளில் ஒன்றினைத் தனி இலக்கியமாகப் படைக்கப் புலவர்கள் எண்ணுதல்.

மரபு வழியாக வந்த சில இலக்கியங்களை இணைத்துப் புதிய இலக்கியம் படைக்கும் நோக்கம்.

சங்க இலக்கியத்தில் தனித்தனியாக உள்ள துறைகளை இணைத்துப் புதிய இலக்கிய வகையை உருவாக்கும் எண்ணம்.

பக்தி, இயக்கம் தோன்றிய காலத்தில் கருத்துக்களைப் பரப்ப ஏராளமான சிற்றிலக்கிய வகைகளைக் கருவியாக கொள்ளுதல்

புலமைத்திறன் அல்லது தம் அறிவினை வெளிப்படுத்தும் நோக்கில் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளைத் தோற்றுவித்தல்

**சிற்றிலக்கியத்தின் சிறப்புகள்**

சிற்றிலக்கியம் என்றால் சிறு இலக்கியம் என்ற பொருள் தந்தாலும் அவை உண்மையில் பேரிலக்கியத்திற்கீடான பல சிறப்புகளைத் தம்முள் கொண்டவை. சிற்றிலக்கியம் சங்க காலம் முதல் இன்று வரையிலும் தோன்றிக் கொண்டிருக்கும் நீண்ட வரலாற்றை உடையவை. சைவம், வைணவம், சமணம், கிறித்துவம், இசுலாம் என பல்வேறு சமயத்தினர்களும் சிற்றிலக்கியம் படைத்துள்ளனர். இவை உவமை, உருவகம், கற்பனைச் சிறப்புகள் நிறைந்து காணப்படுகின்றன. இறைவன், ஞானக்குறவர், மன்னன், வள்ளல், சாதாரண மக்கள் என அனைவரையும் பற்றிப்பாடுவனவாக அமைந்துள்ளன. நாட்டுப்புற இலக்கிய வகைக் கூறுகள் பலவற்றைக் கொண்டு சாதாரண மக்களைக் கவரும் வண்ணம் உள்ளன. நாட்டின் சமுதாய அரசியல், பண்பாட்டு, வரலாறுகளை வெளிப்படுத்துக்கின்றன. இந்திய மொழிகள் பலவற்றிலும் காணப்படுகின்றன.

**முடிவுரை:-**

சிற்றிலக்கியங்கள் அளவில் சிறிய சிற்றிலக்கியங்கள் தொடக்கக் காலத்தில் சைவம், வைணவம் எனும் இருமதங்களைச் சார்ந்தவைகளாக இருந்தன. பின்னாளில் இசுலாம், கிறித்துவம் போன்ற சமயங்களிலும் சிற்றிலக்கியங்கள் உருவாயின. இவை பாடுபொருளாகக் கொண்டும், யாப்பு முறைகளைக் கொண்டும், பிரித்தறியப்பட்டன. பாடு பொருள் என்பது அகப்புற மரபுகளைச்

சார்ந்தே இருந்தன. 96 வகை எனும் கணக்கினைத் தாண்டி 130 வரை இன்று சிற்றிலக்கியங்கள் உள்ளன.

**துணை நின்ற நூல்கள்:-**


1. இளம்பூரணம் - தொல்காப்பிய எழுத்ததிகார உரை - 1986 கழக பதிப்பு, திருநெல்வேலி
2. பேரகராதி - சென்னை பல்கலைக்கழகம், சென்னை - 1956
3. சுப்ரமணியம் ச.வே. - சிற்றிலக்கிய திறனாய்வு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
4. முக்கூடற்பள்ளு - சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - முதற்பதிப்பு
5. செல்வம் வே.தி.- தமிழக வரலாறும் பண்பாடும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு - சென்னை
6. ஞானசேகரன்.தே. - பள்ளு இலக்கியம், மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் , தரமணி, சென்னை - 2006
7. வரதராசன். மு.- இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை - 1988